# போதைப் பொருள் பயன்படுத்திய அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி மாணவர் அணியினர் ஆர்ப்பாட்டம்! கழகத்தினர் கைது!



பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்திய அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் மாணவரணி சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை தலைமை தபால் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்வில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., எம்.எம்.அப்துல்லா, த.சந்திரசேகர், செ.அசோக் பாண்டியன் துணை மேயர் எம்.லியாகத் அலி, அரு. வீரமணி, வே.ராஜேஷ், எஸ்.எஸ்.கருப்பையா, பெ.ராஜேஸ்வரி, கீரை. தமிழ்ராஜா மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம் மாநகரம் கோட்டை மைதானத்தில் மாணவரணி சார்பில் ஆர்ப்பாட்டம் செய்ய முயன்றபோது, மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இரா.இராஜேந்திரன், சி.இராஜேந்திரன், எம்.எம்.ஷெரீப், எஸ்.ஆர்.அன்வர், மாணவரணி அமைப்பாளர்கள் ஆர்.கோகுல் காளிதாஸ் மணிகண்டன் மற்றும் ஏராளமானோர் கைது செய்யப்பட்டனர்.




பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியிட்ட நிர்வாக திறமையற்ற சோபா மாடல் அரசின் த.வெ.க. அரசின் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி நாகை மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நாகை அவுரி திடலில் மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் நடைபெற்றது. உடன் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன் மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டமாணவர் அணி சார்பில் பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்தியது போல் வீடியோ வெளியிட்ட நிர்வாக திறமையற்ற சோபா மாடல் அரசின் த.வெ.க. அரசின் அமைச்சர் சரத்குமார் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் வழிகாட்டுதலின்படி கண்டன ஆர்ப்பாட்டம் மயிலாடுதுறை கிட்டப்ப அங்காடி அருகே தலைமை தபால் நிலையம் முன் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமை செயற்குழு உறுப்பினர் இராம. இளங்கோவன், மாவட்ட கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் துணை செயலாளர்கள் மு.ஞானவேல், எஸ். செல்லமணி, பொருளாளர் மகா.அலெக்சாண்டர், மயிலாடுதுறை நகரக் கழக செயலாளர் குண்டாமணி (எ)என்.செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் மங்கை எம்.சங்கர், என்.இளையபெருமாள், ஞான.இமயநாதன் ஏ.ஆர்.ராஜா, ப.முருகமணி, பொதுக்குழு உறுப்பினர் பி.சிவதாஸ் மற்றும் பலர் உள்ளனர்.




மனிதவளத்தை மேம்படுத்த நியமிக்கப்பட்டிருக்கும் த.வெ.க. அரசின் அமைச்சர் போதை மருந்து பயன்படுத்துவதாக வந்த செய்தியை தொடர்ந்து, அவரை பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தி திருவாரூர் திரு.வி.க. கலைக்கல்லூரிக்கு எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாணவரணி அமைப்பாளர்கள் மதி.நெல்சன் மண்டேலா, யோகபாலன், மதி.முத்துக்குமார், இளைஞரணி அமைப்பாளர்கள் ஏ.எஸ்.குமார், எம்.பி.எடிசன், ஒன்றியச் செயலாளர் புலிவலம் ஏ.தேவா, நகரச் செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் மற்றும் மாணவரணியினர் பங்கேற்றனர்.




மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் டி.சரத்குமார் பொதுவெளியில் போதைப் பொருள் உபயோகப்படுத்தியதைக் கண்டித்து புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக மாணவர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் அறந்தாங்கி கலைஞர் கருணாநிதி பேருந்து நிலையம் அருகே நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆ.கலைச்செல்வன் தலைமை வகித்தார். அறந்தாங்கி நகரச் செயலாளர் க.ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் பொது இடத்தில் போதை பொருளை உபயோகப்படுத்திய தமிழக அரசின் அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தியும், தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கேட்டை கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் ம உதயம் சண்முகம், சக்தி ராமசாமி, கே.பி.கே.டி.தங்கமணி, பொன் கணேசன், வே.பொன்துரை, கே.சி.சிவக்குமார், ஆ.பழனிக்குமார், இரா.ஆனந்த், ஆர்.வி.செல்வம், த.மணிராஜன், பாத்திமா பீவி, ஆவுடையுனுஸ், பழனியப்பன், சக்தி வேல், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், ராஜபெரியண்ணன், ஜெயகிருஷ்ணராஜ், உதயசூரியா மற்றும் பலர் உள்ளனர்.




ஈரோடு வடக்கு மாவட்டத்தில் போதைப்பொருள் பயன்படுத்திய த.வெ.க. கட்சி அமைச்சரைக் கண்டித்து மாணவர் அணி சார்பாக ஆர்ப்பாட்டம் 29.06.2026 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கோபிசெட்டிபாளையம் ஜீயான் தியேட்டர் முன்பு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தோழர்கள் என மொத்தம் 258 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கைதாகியுள்ளனர்.




ஈரோடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் தலைமையில், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் இ.பிரகாஷ், எம்.பி., மற்றும் ஈரோடு மத்திய மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் 500க்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர்கள் ஜெயேந்திரன் மற்றும் கண்ணன் தலைமையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய மாணவரணி நிர்வாகிகள் மற்றும் மாணவர்கள், கழக நிர்வாகிகள் என 500க்கும் மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்ட மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது, அனுமதியின்றி போராட்டம் நடத்தப்படுவதாக கூறி, கிருஷ்ணகிரி டான்சி அருகே திரண்டு இருந்த 300க்கும் மேற்பட்ட தி.மு.க.வினரை காவல்துறையினர் கைது செய்து வாகனங்களில் அழைத்துச் சென்றனர்.